## நாவுல பிரதேச சபை
## மாதளை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 28 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆயுர்வேத திணைக்களத்தின் ஒதுக்ககீட்டின் மூலம் பெற்றுக் கொடுத்திருந்த ரூபா 320,000 பெறுமதியான ஆயுர்வேத பொருட்கள் உதவி ஏனைய உதவியின் கீழ் கணக்கிடப்படாததுடன் ஆயுர்வேத மருந்து பொருட்கள் இருப்பு பெறல் மற்றும் வெளிப்படுத்தல் இருப்பு கணக்கில் குறிப்பிடப்படாததனால் ரூபா 121,583 பெறுமதியான ஆயுர்வேத இருப்பு மீதி இருப்பாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி மற்றும் கட்டிடங்கள் மீதியினுள் உள்ளடங்கியுள்ள பௌதீகரீதியாக நிலவாத ரூபா 86,500 ஆன பிரஜைமண்டபம் ரூபா 100,000 பெறுமதியான கிராம சபை அலுவலக கட்டிடமொன்று மற்றும் ரூபா 60,000 பெறுமதியான எலஹெர பாதையில் சில கடைகள் கணக்குகளில் காட்டப்பட்டதனால் காணி மற்றும் கட்டிடங்களில் மீதி ரூபா 246,500 மிகையாக காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் நிலையான சொத்துக் கணக்கின் பெறுமதி ரூபா 85,419,358 ஆனதுடன், மூலதனத்திற்கு வருமானத்தால் பங்களிப்பு கணக்கு ரூபா 86,888,319 ஆனமையால் அக் கணக்குகள் இடையில் ரூபா 1,468,961 ஆன வித்தியாசம் காணப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 9 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,499,735 ஆனதுடன், அவற்றின் 3 வருட காலத்தையும் விஞ்சி தீர்க்கப்படாமல் நிலவிய கூட்டுத்தொகை ரூபா 543,255 ஆன 3 கணக்கு மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

#### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,409,191 ஆனதுடன், அவற்றின் ஒராண்டு காலத்தையும் விஞ்சி தீர்க்கப்படாமல் நிலவிய ரூபா 2,810,238 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கப்பட்டிருந்தன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 4 கணக்கு மீதிகளுக்கான கூட்டுத்தொகை ரூபா 29,997,396 ஆன மீதிகள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| | (i) 29 விதி | 13 சந்தர்ப்பங்களில் ஈ னென பியச மத்திய நிலையத்தில் சேகர்ந்த ரூபா 51,307 ஆன வருமானம் 9 நாட்கள் முதல் 74 நாட்கள் வரையான காலம் கையில் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. |
| | (ii) 180 விதி | ஈ னென பியச பொறுப்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலரால் மத்தியநிலையத்தின் வருமானம் சேகரித்தல் மற்றும் அதற்காக பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்ற போதும், 2017 மார்ச் வரையிலும் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 217 விதி | காணி மற்றும் கட்டிடங்கள் மீதான பதிவேடொன்று நாளாதுவரையாக பராமரித்திருக்கவில்லை. |
| | (iv) 218 விதி | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த பௌதீக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் viii அத்தியாயத்தின் 10:1(அ)பிரிவு | 7 சந்தர்ப்பங்களுக்கான வேலை செய்த நேரம், வரவு மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்படாதிருந்தும் விடுமுறை தின சம்பளமாக ரூபா 25,135 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 2016/03 மற்றும் 2016 மார்ச் 17 திகதிய சுற்றறிக்கை | மதிப்பீடு பிரகாரம் மாதாந்த வாடகை அறவிடப்படாமல் 2013 மே 30 திகதிய சபை தீர்மானம் மீதான அடிப்படையில் 36 கடையறைகளிலிருந்து ரூபா 2,000 வீதம் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,901,185 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,465,634 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 9,435,551 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) நிதி விளைவுகளில் வளர்ச்சிக்கு 3 வருமான விடயங்களில் ரூபா 9,150,170 ஆன வருமானம் அதிகரிப்பு மற்றும் ஓர் செலவின விடயத்தின் ரூபா 789,394 ஆன செலவு குறைதல் விஷேடமாக தாக்கம் விளைவித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ரூபா 27,708,049 ஆன மொத்த மீண்டுவரும் செலவின் ரூபா 22,346,109 ஆன தொகை அதாவது, 81 சதவீதம் சம்பளத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீத வரி

(அ) மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,096,470 ஆனதுடன், ஆண்டின் பற்றுச்சீட்டிடலான ரூபா1,655,539 இல் ரூபா 699,583 அதாவது 42 சதவீதம் நிலுவையாக இருந்தது.

(ஆ) பிரதேச சபை 32ஆம் விதி பிரகாரம் வீதவரி பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆண்டின் பின்னர் வீதவரி சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 8 அரச நிறுவனங்களின் மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய ரூபா 159,456 ஆன வீதவரி 2 ஆண்டு முதல் 8½ ஆண்டு காலம் வரையும் அறவிடப்படாமல் இருந்தது.

#### 2.3.2 கடை வாடகை

6 கடையறை கட்டிட தொகுதிகளில் 48 கடையறைகளின் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 367,425 ஆனதுடன், அம் மீதியினுள் 5 கடையறைகளுக்கான 2013 ஆண்டு முதல் அறவிட வேண்டி நிலவிய ரூபா 180,420 ஆன நிலுவை கடை வாடகை மீதியொன்றும் காணப்பட்டது.

#### 2.3.3 ஏனைய வருமானம்

**(அ)** ஏக்கர் வரி

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலவிய ரூபா 23,685 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதி 7ஆண்டு முதல் வித்தியாசமின்றி முன்கொண்டு வரப்பட்டது.

**(ஆ) நீர்க் கட்டணம்**

வருட ஆரம்பத்தில் இருந்த ரூபா 236,707 ஆன நிலுவை நீர்க் கட்டணத்தின் ரூபா 130,988 அதாவது-, 55 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் ரூபா 199,085 ஆன நிலுவை நீர்க் கட்டண வருமானம் காணப்பட்டது.

**(இ) குப்பை வரி**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலவிய ரூபா 19,613 ஆன நிலுவை குப்பை கட்டணம் மீதி 6 ஆண்டு முதல் வித்தியாசமின்றி முன்கொண்டு வரப்பட்டது.

**(ஈ)** விளம்பர பலகைக் கட்டணம்

விளம்பர அறிவித்தல் மீதான வருடாந்த மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லாததுடன், விளம்பர பலகை காட்சிப்படுத்தலுக்கான அனுமதி பெற்றுக் கொடுக்க முறையான குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. விளம்பர பலகை கட்டணம் அறவிடல் தொடர்பான பதிவேடொன்றும் நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 1,817,363 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 5,629,437 ஆன தொகை பெற வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------------

**3.1 செயலாற்றல்**

-------------------

ரூபா 40,609,233 ஆன மொத்த மீண்டுவரும் வருமானத்தின், சபையின் சுய சம்பாதிப்பு வருமானம் ரூபா 10,261,021 ஆகியமையினால் சுய சம்பாதிப்பு வருமானம் மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 25 சதவீதம் அளவான கீழ் தரத்தில் நிலவியது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

---------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ)** 2016 திசெம்பர் 31 இல் பதவியனியினரின் 6 பதவிகளில் 14 வெற்றிடங்கள் மற்றும் ஒரு பதவியில் மிகையும் நிலவியதுடன். வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** 1999 ஜனவரி 23 ஆம் திகதி விபத்துக்குள்ளாகிருந்த இலக்கம் 252-6567 கொண்ட டபல் கெப் வண்டியின் பழுதுபார்தலுக்காக செலவிடப்பட்ட பணத்தின் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாப்பணத்தால் மீள்நிரப்பப்படாத ரூபா 152,200 ஆன தொகை பொறுப்புக்குரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளாமல் பெறப்பட வேண்டிய மீதியொன்றாக தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) இடமாற்றம் பெற்று சென்ற 4 அலுவலகர்களின் ரூபா 19,931 ஆன ஊழியர் பிணை ஆவணங்கள் புது நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காம சபையின் பிணை வைப்பாக காட்டப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 50 கட்டிட விண்ணப்பங்களுக்கான அனுமதி பெற்றுக்கொடுத்திருந்ததுடன், 8 இணக்கப்பாட்டுச் சான்றுகள் மாத்திரமே வழங்கப்பட்டடிருந்தது.

(ஆ) அபிவிருத்தி அதிகாரப் பத்திரம் பெற்றிருந்த போதிலும், இணக்கப்பாட்டுச் சான்றிதழ் இல்லாமல் குடியேறியது தொடர்பாக 10 நிலையங்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 158,650 ஆன கட்டணம் 2017 ஜனவரி 23 திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை அலுவலக கட்டிடத்தின் 2015 ஆண்டு முதல் நடாத்திச்செல்லப்படும் ஈ நென பியச மத்திய நிலையத்தின் பாடநெறிக்கான போதியளவு மானவர்கள் சேர்த்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்காததுடன், அதன் வருமானத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கல் உள்ளிட்ட வருமான சேகரித்தல் சபையின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வைக்குள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அடிக்கட்டை கிடைப்பது தொடர்பாக பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 17 பிரகாரம் பி.ச 21 பிரகாரம் பதிவேடொன்று நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலக்கம் 77-8931 கொண்ட உழவு இயந்திரம் 2011 ஆண்டு முதலும், பழுதடைந்திருந்த ரூபா 135,000 பெறுமதியான நீர் பவுசர் ஒன்று 2010 ஆண்டு முதலும் விளைவற்றதாக இருந்தது.

(ஆ) 2015 பெப்ரவரி 6 திகதி உள்ளூராட்சீ நிறுவனங்களின் பராமரிப்பு பிரிவுகளுக்காக தேவையான அடிப்படையான இயந்திரங்கள் பகிர்ந்து கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 7,967,144 பெறுமதியான பாதை அழுத்தும் இயந்திரம் 2016 ஆண்டின் போது விளைவற்றதாக இருந்தது.

(இ) நாவுல வாராந்த சந்தையின் 6 கடையறைகள் பயனற்றதாக நிலவியதுடன், அவற்றின் 4 கடையறைகள் 2013 ஆண்டு முதல் மூடித் தாளிடப்பட்டிருந்தது. பழுதடைந்த நிலையில் உள்ள இந்த கடையறைகள் மீள் குத்தகைக்கு வழங்கி பாவனைக்கு எடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக தற்போது ஒப்பந்தத்திற்குட்பட்ட கடை வாடகை அளவான மாதாந்தம் ரூபா 2,000 வீதம் 4 ஆண்டுக்காக ரூபா 384,000 ஆன வாடகை வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) மத்திய மாகாண வியாபார, வணிக மற்றும் சுற்றுலா திணைக்களத்தின் ஓதுக்கீட்டின் மீது ரூபா 2,452,591 செலுத்தி சபைக்கு சுவீகரிக்கப்படாத வளவில் 2015 நவம்பர் அன்று நிர்மானிக்கப்பட்டிருந்த வரலாற்று ரீதியான நாலந்தா கெடிகே அண்மித்த சுற்றுலா வசதிகள் நிலையம் 2017 மே 23 வரையும், திறப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் எவ்வித பராமரிப்புமின்றி விளைவற்றதாக இருந்தது.

### 3.5 கழிவு பொருள் முகாமை

**(அ)** ஒரு தினத்தில் ஒன்றுசேரும் குப்பை மெற்றிக் டொன் 1½ யும், 2 ம் இடையிலான அளவு 2017 மே 30 திகதி வரையும் சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்காத சேருதண்டாபொல காணிக்கு வெளியிடப்படுவதுடன் பௌதீக பரிசோதனையின் போது வேறுபடுத்தாமல் முறையற்றவிதத்தில் குப்பைகள் இடத்திற்கு இடம் குவிக்கப்பட்டிருந்தன. காணியை சுற்றி பாதுகாப்பு வேலியொன்று நிர்மானிக்கப்பட்டிருக்ககாததுடன், இவ் வளவினுள் தனியார் நிறுவனமொன்றாலும் குப்பை இடப்பட்டிருந்தது.

(ஆ) குப்பை வெளியிடப்படும் காணியில் 2006 ஆண்டின் ரூபா 1,050,000 செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த குப்பை வேறுபடுத்தும் கட்டிடம் 2017 மே 30 திகதி வரையும் எவ்வித பிரயோசனமுமின்றி பயனற்றதாக இருந்தது

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்காக அலுவலகலொருவர் நியமிக்கப்ட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீடு கட்டுப்பாடு

மீளாய்வாண்டுனுள் பாதீடு சீர்த்திருத்தப்பட்ட பின்னரும், பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவிற்குமிடையில் கனிசமான அளவு விலகல் அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்படாமையினால் 14 செலவு விடயங்களில் தேறிய ஒதுக்கீடு மற்றும் செலவுகளிற்கு இடையில் 36 சதவீதம் முதல் 97 சதவீத வீச்சளவு வரையான விலகல் நிலவியது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானம் சேகரித்தல்.
(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்.
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) பாதீடு கட்டுப்பாடு.